**வலல்லாவிட்ட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 இன் கணக்காய்வு அறிக்கையின் 2.2.1(உ) இல் சீராக்கும் போது முத்திரைக் கட்டணக் கணக்கு ரூபா 50,000 வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கு ரூபா 50,000 செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அந்தத் தொகை மூலதன செலவின கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக அக்கணக்கு ரூபா 50,000 தொகை குறைவாகவும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கு ரூபா 50,000 தொகை குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குக் கிடைக்க வேண்டிய நீர் நுகர்வுக் கட்டணம் ரூபா 1,154,791 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு வட்டியாகக் கிடைத்த ரூபா 59,888 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 116,962 தொகையான நானாவித செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் மின்சாரப் பொருள் செலவினம் ரூபா 79,538 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையினால் திரண்ட நிதியம் மற்றும் மின்சாரப் பொருள் இருப்பு என்பன ரூபா 79,538 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 47,672,975 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,657,378 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

நாளதுவரையாக்கப்பட்ட வைப்புப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்மையினால் ரூபா 7,426,016 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 இனங்காமைகள்

#### 1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவது அசையாத ஆதனம் அல்லது அசையாத ஆதன வகையொன்றின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரியொன்று அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் ஆதனவரிக்காக புதிய கண்டறிதல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 49,491,312 | சபைக்குச் சொந்தமான சகல காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 571 | 2,066,743 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் |

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  |  | தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/1/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் என்பன பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,441,905 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,907,987 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

261-001-9-0000044 ஆம் இலக்கத்திற்குரியதாக நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 85,950 தொகையான 08 கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,760,628 | 3,056,598 | 2,980,112 | 1,965,705 | 2,727,030 | 2,977,691 | 3,169,413 | 2,216,113 |
| வாடகை | 6,828,650 | 5,820,253 | 5,518,622 | 29,174 | 5,867,000 | 4,233,901 | 4,238,075 | 12,942 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 143,000 | 245,990 | 247,240 | - | 70,000 | 72,360 | 70,110 | 2.250 |
| ஏனைய வருமானம் | 49,110,100 | 42,694,265 | 42,694,265 | - | 45,955,800 | 51,431,315 | 51,431,316 | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,303,176 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடலில் ரூபா 8,645,851 தொகை மற்றும் ஆண்டின் பெறுவனவுகள் ரூபா 8,890,511 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 2,058,516 ஆகும்.

### 2.3.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

(i) மீளாய்வாண்டில் ஆதன வரி சிட்டையிடல் ரூபா 1,982,120 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,465,584 தொகை அதாவது 74 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 1,647,155 தொகையில் ரூபாா 656,972 தொகை அதாவது 40 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 1,506,719 ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனவரி அறவிடலின் செயல்முன்னேற்றம் 58 சதவீதம் ஆகும்.

#### (ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 67,523 ஆக இருந்ததுடன் அதில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 16,533 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நடப்பாண்டில் சிட்டையிடல் ரூபா 14,818 ஆக இருந்ததுடன் அதில் 7,461 தொகை அதாவது 50 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

#### (அ) கைத்தொழில் வரி

(i) உரிய ஆண்டின் போது கைத்தொழில் வரி செலுத்தாத வரியிறுப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு வரித்தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அறவிடப்படாத கைத்தொழில் வரி

வருமானம் ரூபா 91,660 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை வரியிலிருந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 38,000 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் கைத்தொழில் வரி சிட்டையிடல் ரூபா 117,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 95,750 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய 65 கைத்தொழில் வரியிறுப்பாளர்களிடமிருந்து ரூபா 74,910 நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வியாபார வரி**

---------------------

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வியாபார வரி மீதி ரூபா 425,010 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அதில் ரூபா 230,190 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் சிட்டையிடல் ரூபா 649,660 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 511,750 தொகை மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 253 வரியிறுப்பாளர்களிடமிருந்து ரூபா 332,730 நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந்த வரித்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

--------------------------------

**(அ) நிலைய வருமானம்**

--------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ரூபா 10,000 ஆக இருந்ததுடன், ஆண்டின் இறுதியில் அந்த நிலுவை ரூபா 29,174 வரை அதிகரித்திருந்தது.

**(ஆ) இறைச்சிக் கடை வருமானம்**

-----------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இறைச்சிக் கடை நிலுவை வருமானம் ரூபா 56,636 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) அறிவித்தல் பதாதை வருமானம்**

------------------------------------------------------

1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு அறிவித்தலையும் காட்சிப்படுத்தும் போது சபையின் செயலாளரால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் மாத்திரம் காட்சிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதை மற்றும் பெயர்ப்பலகைகளிலிருந்து ரூபா 239,050 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நீரக் கட்டணம்**

------------------------

சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற நீர் செயற்திட்டத்திலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 207,844 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,181,821 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,500,000 ஆகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உபவிதி

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 08 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட வேலைகள் தொடர்பான விபரங்கள் சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,021,447 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக உபவிதியொன்றை விதிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கழிவுகளை அகற்றுவதற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக செலவிடப்பட்ட கிரயத்தை மேவுகை செய்வதற்காக கழிவுப்பொருள் வரி விதித்தலும் மேற்கொள்ளப்படவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 11 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**(அ) அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துதல்**

2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்புப் பணம் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டமையின் காரணமாக ரூபா 43,100 தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**(ஆ) சபைக்குச் சொந்தமான காணி மெய்மையாய்வு செய்யப்படாமை**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 இன் பிரகாரம் மெய்மையாய்வுச் சபை நியமித்து அல்லது வேறு முறையில் சபைக்குச் சொந்தமான காணிகளை சரியாக இனங்காண்பதற்கும், இனங்காணப்பட்ட காணிகளை மதிப்பீடு செய்வதற்கு அல்லது உரித்தை உறுதிப்படுத்தும் வகையில் வேலி எல்லையினை அமைத்து சபைக்கு உரித்தாக உள்ளதாகக் காண்பிக்கும் பெயர்ப்பலகை பொருத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

மூன்றாம் நிலையில் 01 பதவியும், இரண்டாம் நிலையில் 12 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் இரண்டாம் நிலையில் 03 பதவிகளும் ஆரம்ப நிலையில் 01 பதவியும் மிகையாகக் காணப்பட்டன.

**(ஆ) ஊழியர் கடன்**

தொழிலிருந்து விலகிய மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற மூன்று ஊழியர்களிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 8,750 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமமானம் 11 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையும், செலவினங்களில் 12 சதவீதம் முதல் 317 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | (ii) | அறிவித்தல் பதாதை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற வருமானங்களை சரியாக இனங்காண்பதற்குரிய முறையான மெய்மையாய்வு நடாத்தப்படாமை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | | (ii) | வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை. |
| (ஈ) | சொத்துக்கள்/ஆதனங்கள் | (i) | பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை. |
| | | (ii) | பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (ii) | வாகனங்களிலிருந்து கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் தொடர்பாக பதிவேடு பராமரிக்கப்படாமை. |
| (ஊ) | ஊழியர் முகாமைத்துவம் | | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |